2021 செப்டம்பர் 3]

கொடுத்திருக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற மந்திரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அனைவரும் அரசுக் கல்லூரிகள் வேண்டுமென்று கொடுத்திருக்கின்றார்கள். நிச்சயமாக, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–20

ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், சாதாரணமான விஷயம் கிடையாது. அதிலும் குறிப்பாக, ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதைப் பொறுத்தவரையில், 34 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப வேண்டும். அதுமட்டுமல்ல, ஊதியம் ஆண்டொன்றிற்கு ரூ.2¼ கோடி கொடுக்க வேண்டும். மேலும், கட்டடங்கள் மற்றும் தளவாடங்களுக்காக ரூ.12 கோடி செலவாகும். இவ்வளவு நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி நெருக்கடியிலே, 10 கல்லூரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். நிச்சயமாக வருங்காலங்களிலே உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படும் என்று நான் முதலிலே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

சாலையை மேம்படுத்துதல்

***579—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்–கச்சமங்கலம்–மாரனேரி சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்–கச்சமங்கலம்–மாரனேரி சாலை 5.2 கிலோ மீட்டர் தூரம்

நீளமுடையது. இதில், 3.2 முதல் 4 கிலோ மீட்டர் வரையிலான சாலைப் பகுதி, ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில், 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 24–8–2020–ல் பணிகள் முடிவுற்று நல்ல நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவையாறு தொகுதியில், இதர மாவட்டச் சாலையான மகாதேவபுரம்–கச்சமங்கலம்–மாரனேரி சாலையின் மொத்த நீளமான 5 கிலோ மீட்டரில், 1 கிலோ மீட்டர் கடந்த ஆண்டு போடப்பட்டது. இப்போது அந்த 5 கிலோ மீட்டர் சாலை மிக மோசமான நிலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மக்கள் பயன்பாடு அதிகமுள்ள அந்தச் சாலையைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்பதோடு, கடந்த காலங்களில் ஒரு சாலை என்றால், 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் என்று மட்டும் போடுகின்ற நிலைப்பாட்டை மாற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் ஒரு சாலைப் பணியை எடுத்தால் முழுவதுமாகப் போடுகின்ற நிலைப்பாட்டை துறை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள சாலைப் பகுதியினை, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், முன்னுரிமையின் அடிப்படையிலே மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக, Planned Preventive Maintenance - PPM திட்டத்தில், ரூ.213 கோடி மதிப்பீட்டில் திருவையாறு தொகுதியில் ODR, MDR சாலைகளை அகலப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் பணிகள்

2021 செப்டம்பர் 3]

தொடங்கப்பட்டன. ஆனால், பொதுத் தேர்தல் வந்தவுடன் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இதேபோல பல சாலைகளில் பணிகளை பாதியில் நிறுத்தியிருக்கிறார்கள். துறைமூலம் விரைந்து எல்லா சாலைகளையும் மேம்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதியைப் பொறுத்தளவில், இதர மாவட்டச் சாலை அதாவது, ODR, 320 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், அந்தத் தொகுதியில் மட்டும் உள்ளன. திருவையாறு தொகுதியில் மொத்தமுள்ள 31 சாலைகளில், 196.46 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைப் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே ஒப்பந்தங்கள் எல்லாம் போடப்பட்டு, திருவையாறு தொகுதியிலே PPM திட்டத்தின்கீழ், சாலைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மெத்தனப்போக்காக நடைபெறுவதாக ஒரு தகவலை இங்கே சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை அழைத்து, அதற்குரிய அதிகாரிகளை அழைத்துப்பேசி, திருவையாறிலே, அந்தச் சாலைப் பணிகள் விரைந்து, இன்னும் ஆறு மாத காலத்திற்குள் நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசு எடுக்கும். அதோடுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தின்கீழ் தொடர்ந்து ஆண்டாண்டுக்குப் பராமரிக்கின்ற பணியும் ஒப்பந்தத்தில் இருக்கின்ற காரணத்தினால், சாலைகள் போடப்பட்டு, அந்த ஒப்பந்தங்கள் நிறைவடையும் வரை அவையெல்லாம் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும் அரசு கவனத்திலே கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய உச்சக்கடை முதல் கன்னியாகுமரி வரை செல்லுகின்ற சாலையில், புதுக்கடைப் பகுதியிலிருந்து விரிவிளை வரையுள்ள கணபதியான்கடவுச் சாலை என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மிகவும் குறுகலாக இருக்கிறது. அந்த குறுகலான

சாலை தற்போது, மூன்றே முக்கால் மீட்டர் நீளம்தான் இருக்கிறது. அதனால் அந்தச் சாலையை போக்குவரத்திற்கு பேருந்துகள் பயன்படுத்துவதற்கும், பொது மக்கள் பயன்படுத்துவதற்கும் மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த ஒரு கிலோ மீட்டர் சாலையை, ஐந்தே முக்கால் மீட்டர் சாலையாக விரிவுபடுத்தித் தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஏற்கெனவே என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அந்தப் பகுதி கோட்டப் பொறியாளரை அழைத்துப்பேசி, இதற்கு வேண்டிய முன்மொழிவை பெறவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அப்படிச் சாலைகளை விரிவுபடுத்துகிறபோது, நில எடுப்புப் பணி என்பது முக்கியமான ஒன்று. அதற்கு அரசின் சார்பாக நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதற்கான முன்மொழிவைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைமையை அறிந்து, அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதி, நெய்காரப்பட்டி பேரூராட்சியிலிருந்து பெருமாள்புதூர் செல்கிற சாலையின் இடையில் பச்சையாறு என்கிற பெரிய ஆறு அந்தப் பகுதியில் ஓடுகிறது. அந்த ஆற்றின் குறுக்கே நீண்ட நாட்களாக ஓர் உயர்மட்டப் பாலம் வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நெடுஞ்சாலைத்

2021 செப்டம்பர் 3]

துறை அமைச்சர் அவர்களுடைய கலந்தாலோசனைக் கூட்டத்திலும் அதற்கான மனுவினை அவர்களிடத்தில் தந்திருக்கிறோம். இந்த ஆண்டில் அந்தப் பணிகள் துவங்குவதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நான் மதுரைக்கு ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது அந்தக் கருத்தை வலியுறுத்தியதோடு மட்டுமல்லாமல், என்னிடம் கடிதமும் தந்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் (திட்டம்) அவரிடத்தில் அந்தக் கடிதத்தைக் கொடுத்து, திட்ட மதிப்பீடெல்லாம் தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன். திட்ட மதிப்பீடு வந்தவுடனேயே, நிதித் துறையினுடைய செயலாளரிடத்தில் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அந்தப் பாலம் கட்டுவதற்கு, இந்த ஆண்டே முன்னுரிமை அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

குடமுழுக்கு

***1923—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், மங்களாக்கோவிலில் உள்ள சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த என்னை,*